TAMIL

பாலியல் வன்முறை & இந்தப் பிரச்சாரம் பற்றி மேலும் அறிவதற்குப் பார்வையிடுங்கள்:
http://ocasi.org/campaigns/4ImmigrantWomen

facebook.com/ocasiconnects @OCASI_Policy

facebook.com/mofif @MouvementFemmes

பின்வருவன போன்ற ஆதரவுகளைப் பெறுவதைச் சிரமமாக்கும் தடைகளை குடிபெயர்ந்த மற்றும் அகதிப் பெண்கள் எதிர்நோக்கக்கூடும்:

- நாடுகடத்தப்படலாம் என்ற பயம்
- சமூகரீதியான தனிமை
- காவல்துறைக்குப் பயம்
- மொழித் தடைகள்
- வறுமை
- இனவெறி மற்றும் பாகுபாடு

## எப்படி நான் அறிவிக்கலாம்?

காவல்துறைக்கு, சட்டரீதியான உதவி அமைப்புக்கு, பாலியல் தாக்குதல் ஆதரவு மையத்துக்கு அல்லது குடியிருப்பு முகமையகத்துக்கு நீங்கள் அறிவிக்கலாம். சில ஆதரவு இணைப்புகள் உள்ளடக்குபவை:

பாலியல் தாக்குதல் மையங்கள்:
http://www.sexualassaultsupport.ca/support

ஒன்ராறியோவில் உள்ள பாலியல் தாக்குதல்/வீட்டு வன்முறை சிகிச்சையக மையங்கள்:
http://www.satcontario.com




உங்களுடைய குடிவரவு நிலை தொடர்பாக அறிவிப்பதில் உங்களுக்குக் கரிசனைகள் இருந்தால் தொடர்புகொள்ளுங்கள்:
Legal Aid Ontario ( ஒன்ராறியோ சட்ட உதவி)
1 800 668 8258 அல்லது உங்களுடைய உள்ளூர் குடியேற்ற முகமையகம்



மேலதிக சட்ட ஆலோசனைக்கு, பாலியல் தாக்குதலில் இருந்து பிழைத்து வாழ்பவருக்கான தனித்தியங்கும் சட்ட ஆலோசனைக் கட்டணமற்ற இணைப்பை 1-855-226-3904 ல் தொடர்புகொள்ளுங்கள்






## நான் எப்படிப் பாதுகாப்பாக இருக்கலாம்?

உங்களுடைய பாதுகாப்பு முக்கியமாகும். பாதுகாப்புக்கான திட்டமிடலுக்காக பின்வருவனவற்றை நீங்கள் செய்யலாம்

- உங்களுக்கு நம்பிக்கையான ஒருவருடன் கதைத்தல்
- என்ன நடந்ததென எழுதுதல் அல்லது ஆவணப்படுத்தல்
- குறிப்பாகக் காப்பகம், பிள்ளைகளுக்கான அல்லது சட்டரீதியான பிரச்சனைகளுக்கு ஆதரவு உங்களுக்குத் தேவையானால், சமூக அமைப்பு ஒன்றுடன் தொடர்புபடல்

## பாலியல் தாக்குதல் அல்லது துன்புறுத்தலுக்கு உட்பட்ட ஒருவருக்கு நீங்கள் எப்படி ஆதரவளிக்கலாம்?

- அவர்களை நம்புங்கள்.
- அவர்களைச் செவிமடுங்கள்.
- ஆதாரவளங்களைக் கண்டறியுங்கள்.
- நடவடிக்கை எடுப்பது அவர்களின் தெரிவு என்பதை அறிந்திருங்கள்.

## ஆதரவை நான் எங்கே பெறலாம்?


Assaulted Women's Helpline
1 866 863 0511 / TTY 1 866 863 7868

Ontario Coalition of Rape Crisis Centres
www.sexualassaultsupport.ca/support

Ending Violence, Getting Help
(Ministry of the Status of Women):
www.women.gov.on.ca

Neighbours, Friends & Families
www.immigrantandrefugeenff.ca
for information and support about intimate partner violence.


Shelter Safe Ontario
www.sheltersafe.ca/ontario



அனைத்து நாடுகளிலும் அனைத்துச் சமூகங்களிலும் பாலியல் வன்முறை நிகழ்கிறது. LGBTQIA+ சமூக அங்கத்தவர்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுகிறார்கள். குடிபெயர்ந்தவர்களுக்கும் அகதிகளுக்கும் பாலியல் வன்முறை நிகழ்கிறது.

**இது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.**





**கட்டுக்கதை**
குடிபெயர்ந்தவர்களினதும் அகதிகளினதும் “கலாச்சாரம்” காரணமாகவே அவர்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

**உண்மை**
அனைத்து சமூகங்களிலும் பாலியல் வன்முறை நடக்கிறது. குடிபெயர்ந்தவர்களினது கலாச்சாரம் அதிகளவு வன்முறை நிறைந்தது எனச் சொல்வது இனவெறி மற்றும் வெளிநாட்டவரில் வெறுப்பு/பயத்தைக் (xenophobic) காட்டுகிறது.

Xenophobia என்பது வெளிநாட்டவரில் பயம் அல்லது வெறுப்பாகும்.



**பாலியல்ரீதியாக நான் துன்புறுத்தப்படுகிறேனா அல்லது தொந்தரவு செய்யப்படுகிறேனா?**

உங்களுடைய ஒப்புதல் இல்லாமல் நிகழும் விரும்பத்தகாத அனைத்துப் பாலியல் நடவடிக்கைகளும் பாலியல் துன்புறுத்தல் அல்லது தொந்தரவு எனப்படும்.



**ஒப்புதல் வழங்குதல் =**
பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் தன்னார்வத்துடன் ஒப்புக்கொள்ளல்.

**ஒப்புதல்:**

- ஒருபோதும் அனுமானிக்கப்பட்டதாக அல்லது உட்கருத்து எனக் கருதப்பட்டதாக இருக்கக்கூடாது
- அமைதியானது அல்ல அல்லது “வேண்டாம்” எனச் சொல்லாமல் இருப்பது அல்ல
- மிரட்டல் அல்லது நிர்ப்பந்தம் மூலம் பெறப்பட்டதாக இருக்கமுடியாது

**ஒப்புதல்:**

- எந்த நேரத்திலும் வாபஸ் பெறப்படலாம்
- நம்பிக்கை, வலு அல்லது அதிகாரத்தைக் குற்றம்புரிபவர் தவறாகப் பயன்படுத்தும்போது கொடுக்கப்பட முடியாது
- மயக்கமான நிலையில் அல்லது மதுபானம் அல்லது போதைப்பொருள் பாவனை காரணமாக ஒப்புதலை வழங்க முடியாத நிலையில் இருக்கும் ஒருவரால் கொடுக்கப்பட முடியாது




**Source:** https://www.ontario.ca/page/lets-stop-sexual-harassment-and-violence

**என்னுடைய உரிமைகள் யாவை?**

ஒன்ராறியோவில் இருக்கும் பாலியல் வன்முறை மற்றும் தொந்தரவுத் திட்டச் சட்டம் ((Sexual Violence and Harassment Plan Act) (பிழைத்து வாழ்பவர்களுக்கு ஆதரவளிப்பதுடன் பாலியல் வன்முறை மற்றும் தொந்தரவைச் சவாலாக்கும் சட்டம்)) பாலியல் வன்முறை மற்றும் தொந்தரவிலிருந்து பிழைத்து வாழ்பவர்களைப் பாதுகாப்பதுடன் அவர்களுக்கு ஆதரவளிக்கிறது அத்துடன் ஒன்ராறியோவில் பாலியல் தொந்தரவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிக்கான அணுகலை வழங்குகிறது. மேலும், பணியிடத் தொந்தரவு மற்றும் பணியிடப் பாலியல் தொந்தரவு தொடர்பான தகவல்களையும் பாதுகாப்பையும் இந்தச் சட்டம் உள்ளடக்குகின்றது.

பாலியல் வன்முறை மற்றும் தொந்தரவுத் திட்டச் சட்டம் பற்றிய மேலதிக தகவல்களுக்கு:
https://www.ontario.ca/laws/statute/S16002







**பாலியல் வன்முறைக்கு நீங்கள் உள்ளாகியிருந்தால்,** அது உங்களுடைய தவறல்ல.

பாலியல் வன்முறையில் இருந்து விலகி வாழும் உரிமை உங்களுக்கு உள்ளது.






குடிபெயர்ந்த & அகதிப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையைத் தடுப்பதில் & அது பற்றிப் பேசுவதில் நாங்கள் அனைவரும் பங்கு வகிக்க முடியும்.